**முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.**

**எம்.சி.ஓ.பி. எண். 82/2024 and MCOP No.83/2024**

**ம.சா. 1**

நாள்: 30.01.2025

2025ம் ஆண்டு ஜனவரி திங்கள் 30ம் நாள் சாட்சியின் வாக்குமூலம் 1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சிவரஞ்ஜினி | ஜாதி | |
| தந்தை பெயர் | | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுகா | | வயது | |

<u>முதன்மை விசாரணை:</u>

நான் இம்மனுவில் மனுதாரர். எனது முதன்மை விசாரணை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தயார் செய்து தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விபரங்கள் எனது தகவலின் பேரில் தயார் செய்யப்பட்டு அதை நான் படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். மனுப்படி உத்தரவாக வேண்டுகிறேன்.

<u>ஆவணங்கள்</u>

| வ. எண் | தேதி | ஆவணங்கள் | Description | Remarks |
|---|---|---|---|---|
| 1) | 24.01.2024 | ம.சா.ஆ.1 | விபத்து சம்மந்தமாக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை | நகல் |
| 2) | -- | ம.சா.ஆ.2 | எனது தகப்பனாரின் பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3) | 08.02.2024 | ம.சா.ஆ.3 | எனது தகப்பனாரின் இறப்புச்சான்றிதழ் | நகல் |
| 4) | 18.02.2024 | ம.சா.ஆ.4 | எனது தகப்பனாரின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| 5) | 22.01.2024 | ம.சா.ஆ.5 | 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் TN 45 CY 5983 க்கான காப்பீடு சான்றிதழ் | நகல் |
| 6) | -- | ம.சா.ஆ.6 | மேற்படி வாகனத்தின் ஆர்.சி. அட்டை | நகல் |
| 7) | -- | ம.சா.ஆ.7 | 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| 8) | 01.09.2023 | ம.சா.ஆ.8 | 3ம் எதிர்மனுதாரர் வாகனம் TN 65 BZ 3188 டாடா ஏஸ்-க்கான காப்பீட்டு சான்றிதழ் | நகல் |
| 9) | -- | ம.சா.ஆ.9 | 3ம் எதிர்மனுதாரர் வாகனமான TN 65 BZ 3188 ற்கான RC அட்டை | நகல் |
| 10) | -- | ம.சா.ஆ.10 | 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| 11) | -- | ம.சா.ஆ.11 | என் அப்பாவின் மீனவர் அடையாள அட்டை | நகல் |
| 12) | -- | ம.சா.ஆ.12 | எனது ஆதார் அடையாள அட்டை | நகல் |
| 13) | -- | ம.சா.ஆ.13 | எனது தாயாரின் பிரேத பரிசோதனை அறிக்கை | நகல் |
| 14) | 08.02.2024 | ம.சா.ஆ.14 | எனது தாயாரின் இறப்புச்சான்றிதழ் | நகல் |
| 15) | 28.02.2024 | ம.சா.ஆ.15 | எனது தாயாரின் வாரிசு சான்றிதழ் | நகல் |
| 16) | -- | ம.சா.ஆ.16 | எனது தாயாரின் மீனவர் அடையாள அட்டை | நகல் |

<u>நான்காம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனாரும், தாயாரும் டாடா ஏஸ் வாகனத்தினை அழகன்குளத்திலிருந்து

வாடகைக்கு பேசிவிட்டு சென்றார்கள். அந்த டாடா ஏஸ் வாகனம் ஆனது பொருட்களை ஏற்றிச்செல்லும் வண்டி என்றால் சரிதான். எனது தகப்பனார் என்று சொல்லும் நிலையில், அவரது வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், மீனவர் அடையாள அட்டையை தாக்கல் செய்துள்ளேன்.

எனது தாயாரும் தகப்பனாரும் பொருட்களை ஏற்றிச்செல்லும் டாடா ஏஸ் வாகனத்தில் பயணம் செய்ததால், அவர்களது இறப்புக்கு 4ம் எதிர்மனுதாரர் எவ்வித இழப்பீடும் கொடுக்க கடமைப்பட்டவர்கள் அல்ல என்றால் சரியல்ல. எனது தாய் தகப்பனாரின் இறப்பானது எதிரில் வந்த லாரியின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்றால் சரிதான். விபத்திற்கு லாரியின் கவனக்குறைவுதான் காரணம் என்பதால், 1 மற்றும் 2வது எதிர்மனுதாரர்கள் தான் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும், 4ம் எதிர்மனுதாரர் இழப்பீடு கொடுக்கத் தேவையில்லை என்று சொல்வது சரியல்ல. இந்த வழக்கு சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றும், இழப்பீடு வாங்குவதற்காக விபத்து சம்பவம் குறித்து தவறான விவரம் சொல்லி வழக்கு போட்டுள்ளேன் என்றால் சரியல்ல. 4ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை – இல்லை

ஒப்பம்/–ஏ.கே.மெஹ்பூப் அலிகான் ,
முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம் .